Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم          نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم          وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி **2**

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

இதழ் **5**

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

4 ரபீவுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி          2 தபூக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

2 பிப்ரவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நினைவில் கொள்ளுங்கள். எவர் இறங்கி வர வேண்டியதிருந்ததோ அவர் சரியான சமயத்தில் இறங்கி வந்து விட்டார். இன்று எல்லா முன்னறிவிப்புகளும் நிறைவேறி விட்டன. எல்லா நபிமார்களுக்கும் அருளப்பட்ட வேதங்களும் இதே காலத்தைப் பற்றிதான் சான்று பகர்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நினைவில் கொள்ளுங்கள். எவர் இறங்கி வர வேண்டியதிருந்ததோ அவர் சரியான சமயத்தில் இறங்கி வந்து விட்டார். இன்று எல்லா முன்னறிவிப்புகளும் நிறைவேறி விட்டன. எல்லா நபிமார்களுக்கும் அருளப்பட்ட வேதங்களும் இதே காலத்தைப் பற்றிதான் சான்று பகர்கின்றது. இதே காலத்தில்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் வர வேண்டியது அவசியமானதாக இருந்தது என்பதே கிறித்தவர்களின் கொள்கையுமாகும். அதாவது, . ஆதம் தோன்றிய நாளிலிருந்து ஆறாவது ஆயிரம் ஆண்டின் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவார் என்று இந்த வேதங்களில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. இதற்கு முன்னதாக வால் நட்சத்திரம் தோன்றும் என்றும் எழுதப்பட்டிருந்தது. அது தோன்றி அதிக நாட்கள் ஆகி விட்டன. மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் நாட்களில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒரே மாதத்தில் கிரகணம் நிகழும். அது ரமலான் மாதமாக இருக்கும் என்றும் எழுதப்பட்டிருந்தது. இந்த முன்னறிவிப்பும் நிறைவேறி வெகு காலம் ஆகி விட்டது. மேலும், அவரது காலத்தில் மிகவும் தீவிரமாக பிளேக் நோய் உருவாகும் என்றும் எழுதப்பட்டிருந்தது. இது பற்றிய செய்தி பைபிளிலும் கூட கூறப்பட்டிருக் -கின்றது. பிளேக் நோய் இதுவரை நம்மை பின்தொடர்ந்து வருவதை விடவில்லை என்பதை நான் பார்க்கின்றேன்.

*(தத்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 24)*

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 122 -வது ஆண்டு மாநாடு இறையருளால் வெற்றிகரமாக நடைபெற்றது

சென்ற இதழின் தொடர்ச்சி...

இந்த அமர்வில் இரண்டாவதாக, “ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஷேக் ய.்கூப் அலி சாஹிப் இர்.்பானி (ரலி) ஆகியோரின் வாழ்க்கை” என்ற தலைப்பில் தென்னிந்தியாவின் கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் ஆன மதிப்பிற்குரிய மவ்லானா முனீர் அஹ்மது காதிம் சாஹிப் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “அவர்களது இயற்பெயர் அப்துஷ் ஷம்ஸ் ஆகும். அவர்கள் நம்பிக்கை கொண்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு அப்துர் ரஹ்மான் என்று பெயர் வைத்தார்கள். யமனிலுள்ள தோஸி என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய மூன்று வருடங்கள் வரை பெருமானார் (ஸல்) அவர்களின் நட்பில் இருப்பதற்கான நற்பேறு கிடைத்தது. அவர்கள் முழு நேரத்தையும் பள்ளிவாயிலேயே கழித்து வந்தார்கள். வெளியில் எங்கும் செல்ல அவர்கள் விரும்பமாட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறும்போது அவர்களால் கேட்க முடியாமல் போய் விடக்கூடாது என்பதற்காக அவர்கள் வெளியில் செல்லாமல் இருந்து வந்தார்கள். இதன் காரணமாகவே மூன்று வருட காலகட்டத்தில் அவர்கள் எந்த அளவு அதிகமாக நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள் என்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் நட்பில் அவர்களை விட அதிக காலம் அவர்களுடன் இருந்தவர்களால் கூட அவ்வாறு அறிவிப்பு செய்ய முடியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் ஷேக் ய.்கூப் அலி சாஹிப் இர்.்பானி (ரலி) அவர்களின் வாழ்க்கை பற்றி எடுத்துக் கூறியவாறு அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: “ஹஸ்ரத் ஷேக் ய.்கூப் அலி சாஹிப் இர்.்பானி (ரலி) அவர்கள் 1872 ஆம் ஆண்டு ஜலந்தர் மாவட்டத்தில் பிறந்தார்கள். அன்னார் 1957 ஆம் ஆண்டு தெலுங்கானா மாநிலத்திலுள்ள சிகந்தரா -பாத்தில் வ.்பாத் ஆனார்கள். 1889 ஆம் ஆண்டு அன்னாருக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அவர்களுக்கு 19 வருடங்கள் வரை தனது நேசத்திற்குரிய இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய நட்பில் இருப்பதற்கும் அவர்களிடம் இருந்து அருளைப் பெறுவதற்கும் அவர்களைப் பின்பற்றி நடந்தவாறு போற்றத்தக்க அறிவு சார்ந்த தொண்டுகளைச் செய்வதற்கான நற்பாக்கியமும் கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு 48 வருடங்கள் வரை கிலா.்பத்தின் நிழலின் கீழ் மகத்தான தொண்டுகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அன்னார் 1897 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க அல்ஹகம் பத்திரிகையைத் தொடங்கினார்கள். அவர்கள் பத்திரிகைத் துறையில் பணியாற்றிய -துடன் மட்டுமல்லாமல் திருக்குர்ஆன் விளக்கவுரை மற்றும் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதுவதிலும் அவர்களுக்கு மிகவும் ஆர்வம் இருந்து வந்தது. அவர்கள் நாட்டிலுள்ள பத்திரிகைகளில் எழுத்துப்பூர்வமான விவாதங் -களையும் நடத்தினார்கள்.

இந்த அமர்வில் மூன்றாவதாகவும் இறுதியாகவும் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா ஸைனுத்தீன் ஹாமித் சாஹிப் (நாஸிம் தாருல் கஸா காதியான்) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில் இஸ்லாம் இழந்து விட்ட மகிமையை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் அதை முழு உலகிலும் வெற்றி பெறச் செய்வதற்கும் அல்லாஹ் இந்தக் காலத்தில் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை காதியானின் புனித பூமியில் தோன்றச் செய்தான். இந்த மகத்தான நோக்கத்தை நிறைவேற்று -வதற்காக அல்லாஹ் வானத்தில் மற்றும் பூமியில் உள்ள பல்வேறு வழிகள் மூலமாக அவர்களுக்கு தனது உதவியையும் ஆதரவையும் வழங்கி வந்தான். அவற்றில் ஒரு மகத்தான வழி தான் வஸிய்யத் அமைப்பாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் 1905 ஆம் ஆண்டில்

*(தொடர்ச்சி 7-வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஜனவரி 1 ஆம் தேதி புத்தாண்டு தொடங்கும்போது உலகியல்வாதிகள் எதனைத்தான் செய்வதில்லை? மேலை நாடுகளில் அல்லது முன்னேற்றமடைந்த நாடுகளில் குறிப்பாகவும் மற்றும் உலகின் பிற நாடுகளிலும் 31 டிசம்பர் மற்றும் 1 ஜனவரிக்கு இடையிலுள்ள இரவில் என்ன ஆரவாரங்கள்தான் இருப்பதில்லை? குறிப்பாக நள்ளிரவு வரை விழித்திருக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், முழு இரவும் விழித்திருக்கின்றனர். வெறும் குடி களியாட்டங்களுக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் நடனம் பாட்டுக்காகவும் மட்டும் விழித்திருக்கின்றனர். இவ்வகையில் கடந்துபோன வருடத்தின் முடிவும் வீணான காரியங்களுடன் கழிகிறது. புதிய வருடத்தின் தொடக்கமும் வீணான காரியத்துடன் தொடங்குகிறது. உலகில் பெரும்பாலானவர்களின் மார்க்கக் கண்கள் குருடாகி விட்டன. எனவே, ஒரு நம்பிக்கையாளரின் பார்வை சென்றடையும் இடத்திற்கு அல்லது சென்றடைய வேண்டிய இடத்திற்கு அவர்களின் பார்வை செல்ல இயலாது. ஒரு நம்பிக்கையாளரின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், அவர்கள் இந்த வீணானவற்றிலிருந்து தப்பியிருப்பது மட்டுமின்றி, அதில் அதிருப்தியை வெளிப்படுத்துவது மட்டுமின்றி தம்மை ஆய்வும் செய்ய வேண்டும். பரிசீலனை செய்ய வேண்டும். அவரது வாழ்வில் ஒரு வருடம் வந்து, அது கடந்தும் சென்றது. இதில் அது நமக்கு எதனை வழங்கி விட்டுச் சென்றது? எதனை எடுத்துக் கொண்டு சென்றது? நாம் இவ்வருடத்தில் எதனை இழந்தோம்? எதனைப் பெற்றோம்? என்று நம்பிக்கையாளர் உலகியல் அடிப்படையில் பார்க்க வேண்டும். அவரது உலகியல் நிலையில் என்ன மேம்பாடு உருவானது? அல்லது மார்க்க ரீதியிலும் ஆன்மீக நிலையிலும் அவர் என்ன இழந்தார்? எதனைப் பெற்றார்? என்று அவர் ஆய்வு செய்ய வேண்டும். அவர் மார்க்க மற்றும் ஆன்மீக அடிப்படையில் பார்த்தாலும் கூட இந்த தகுதியை அடிப்படையாக வைத்து பார்க்க வேண்டும்? அதன் மூலம், தான் இழந்தது என்ன? பெற்றது என்ன? என்பது அவருக்கு தெரிய வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். நமக்கு அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் மஹ்தியையும் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளான். அன்னார் நமக்கு முன் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் போதனைகளின் சுருக்கத்தை எடுத்து வைத்து விட்டார்கள். நம்மிடம் இந்த தரத்தை கண் முன் வையுங்கள். அதன் மூலம் நீங்கள் வாழ்வின் நோக்கத்தைப் பெற்று விட்டீர்களா? அல்லது அதனை முழுமைப்படுத்த முயற்சி செய்தீர்களா? இல்லையா? என்பது தெரிய வரும் என்று கூறியுள்ளார்கள். நீங்கள் இந்த தரத்தை முன்னிறுத்தினீர்கள் என்றால் சரியான நம்பிக்கையாளர் ஆக முடியும். இந்த நிபந்தனையின்படி நடந்தீர்கள் என்றால் சரியான பொருளில் ஈமானைப் பேண முடியும்.

நாம் வருடத்தின் கடைசி இரவையும் புதிய வருடத்தையும் இந்த ஆய்வு மற்றும் துஆவின் மூலமே தொடங்கினோம் என்றால், நமது நல்ல முடிவை தக்க வைத்தவர்கள் ஆவோம். நாமும் கூட இந்த வெளிப்படையான வாழ்த்துச் செய்திகள் உலகியல் ரீதியான பேச்சுக்களின் மூலம் புது வருடத்தைத் தொடங்கினோம் என்றால் நாம் இழந்தது அதிகமாகவும் பெற்றது ஒன்றுமில்லை என்றும் ஆகி விடும் அல்லது மிகக் குறைவாகவே பெற்றிருப்போம். பலவீனங்கள் இருக்கின்றன என்றால் நமது ஆய்வு நமக்கு திருப்தி அளிக்கத்தக்கதாக இல்லையென்றால் நாம் இந்த துஆவை செய்ய வேண்டும். அல்லாஹ் நமது வரக்கூடிய ஆண்டை கடந்த வருடத்தைப் போன்று ஆன்மீக பலவீனத்தைக் காட்டிய ஆண்டாக இருக்கச் செய்யாமல் இருப்பானாக! மாறாக, நமது ஒவ்வோர் அடியும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எடுத்து வைக்கப்பட்ட அடியாக இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு நாளும் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். நமது பகலும் இரவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் பக்கம் எடுத்துச் செல்வதாக இருக்க வேண்டும்.

திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறியவாறு அதன் அடிப்படையில் நம்மை நாமே பிரித்தறிந்து கொள்ள வேண்டிய அந்த உயர்ந்த தரங்களைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நாம் அவற்றிற்கு முழுமையாக பொருந்தக்கூடியவர்களாக இருக்கின்றோமா? இல்லையா? என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த போதனை மற்றும் எச்சரிக்கையை முன்னிறுத்தியவாறு வாழ்வைக் கழிப்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நாம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருப்போமாக! நமது வாழ்வை இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக கழிப்பவராவோமாக! நமது வாழ்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப அமைத்தவாறு நமது வாழ்வின் நல்ல முன்மாதிரியை மக்களுக்கு முன்னெடுத்து வைப்பவராகவும் காட்டுபவராகவும் இருப்போமாக! அல்லாஹ் நமது பலவீனங்களை திரையிட்டவாறு நமக்கு அருட்கொடைகளை வழங்குவானாக!ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட வெற்றிகளை நமக்கு காட்டுவானாக! புதிதாக வரக்கூடிய வருடம் பரக்கத்துகளைக் கொண்டு வரட்டுமாக! எதிரிகளின் திட்டங்கள் தோல்வி அடையட்டுமாக! ஜமாஅத்தின் மீது எதிர்ப்பு காட்டுவதற்காக என்ன திட்டங்களை அவர்கள் வளர்த்துக் கொண்டே செல்கிறார்களோ அவற்றை தோல்வியடையச் செய்வானாக! பாகிஸ்தான் அஹ்மதிகள் இவ்வருடம் காதியான் மாநாட்டிற்குச் செல்ல முடியவில்லை. அதில் அவர்களுக்கு பெரும் வருத்தம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் இவர்களின் தாகத்தை தணிப்பதற்கான வழிவகைகளைச் செய்வானாக! அல்ஜஸாயிரில் வாழும் அஹ்மதிகளின் கஷ்டங்களையும் அகற்றுவானாக!

எதிரிகள் தமது வரம்பு மீறல் மற்றும் அநீதியின் செயல்களில் முன்னேறும்போது நாமும் நமது நிலைமைகளை இறை திருப்திக்கேற்ப அமைத்தவாறு துஆவின் மீது அதிக அழுத்தம் தர வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**30 டிசம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **30 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ

இரண்டு நாட்களுக்குப் பிறகு புத்தாண்டு தொடங்குகிறது – இன்ஷா அல்லாஹ். முஸ்லிம்களாகிய நாம் சந்திர கணக்கின்படியும், சூரிய கணக்கின்படியும் ஆண்டுகளைத் தொடங்குகின்றோம். சந்திர கணக்கு என்பது முஸ்லிம்களிடம் மட்டுமல்லாமல் பல சமுதாயங்களிடமும் நடைமுறையில் இருந்தது. சீனாவிலும் இந்தியாவிலும் பிற சமுதாயங்களிலும் இவ்வழக்கம் இருந்தது. பல மதங்களில் இது காணப்படுகின்றது. இஸ்லாத்திற்கு முன்னர் அரபிகளிடம் கூட நாட்களின் கணக்கிற்கான சந்திர காலண்டர் நடைமுறையில் இருந்தது.

எவ்வாறிருப்பினும், உலகில் இந்த கிரிகோரியன் (Gregorian) காலண்டர் அதிக அளவில் நடைமுறையில் உள்ளது. எல்லாரும் இதனை புரிந்து கொள்கின்றனர். எனவே, ஒவ்வொரு நாடும் இந்த காலண்டரை தமது நாட்கள் மற்றும் மாதங்களைக் கணக்கிடுவதற்காக எடுத்துக் கொண்டன. இந்த காரணத்தால் உலகில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வோர் இடத்திலும் இந்த கணக்கின்படி ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஆண்டு தொடங்குகிறது. டிசம்பர் 30 ஆம் தேதி முடிவடைகிறது. எவ்வாறிருப்பினும், வருடம் வருகிறது. 12 மாதங்கள் கழிந்து போய் விடுகிறது. அது சந்திர மாதமாக இருப்பினும் சரி, நடைமுறையில் இருக்கிற இந்த கிரிகோரியன் (Gregorian) காலண்டராக இருப்பினும் சரி உலகவாதிகள் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது நாட்கள், மாதங்கள் மற்றும் வருடங்களை கழிப்பதற்காக உலகியல் மகிழ்ச்சிகளிலும் கேளிக்கைகளிலும் உலகியல் திருப்திகளைத் தரும் பணிகளிலும் மூழ்கிக் கிடக்கின்றனர்.

ஜனவரி 1 ஆம் தேதி புத்தாண்டு தொடங்கும்போது உலகியல்வாதிகள் எதனைத்தான் செய்வதில்லை? மேலை நாடுகளில் அல்லது முன்னேற்றமடைந்த

நாடுகளில் குறிப்பாகவும் மற்றும் உலகின் பிற நாடுகளிலும் **31** டிசம்பர் மற்றும் **1** ஜனவரிக்கு இடையிலுள்ள இரவில் என்ன ஆரவாரங்கள்தான் இருப்பதில்லை? குறிப்பாக நள்ளிரவு வரை விழித்திருக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், முழு இரவும் விழித்திருக்கின்றனர். வெறும் குடி களியாட்டங்களுக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் நடனம் பாட்டுக்காகவும் மட்டும் விழித்திருக்கின்றனர். இவ்வகையில் கடந்துபோன வருடத்தின் முடிவும் வீணான காரியங்களுடன் கழிகிறது. புதிய வருடத்தின் தொடக்கமும் வீணான காரியத்துடன் தொடங்குகிறது. உலகில் பெரும்பாலானவர்களின் மார்க்கக் கண்கள் குருடாகி விட்டன. எனவே, ஒரு நம்பிக்கையாளரின் பார்வை சென்றடையும் இடத்திற்கு அல்லது சென்றடைய வேண்டிய இடத்திற்கு அவர்களின் பார்வை செல்ல இயலாது.

ஒரு நம்பிக்கையாளரின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், அவர்கள் இந்த வீணானவற்றிலிருந்து தப்பியிருப்பது மட்டுமின்றி, அதில் அதிருப்தியை வெளிப்படுத்துவது மட்டுமின்றி தம்மை ஆய்வும் செய்ய வேண்டும். பரிசீலனை செய்ய வேண்டும். அவரது வாழ்வில் ஒரு வருடம் வந்து, அது கடந்தும் சென்றது. இதில் அது நமக்கு எதனை வழங்கி விட்டுச் சென்றது? எதனை எடுத்துக் கொண்டு சென்றது? நாம் இவ்வருடத்தில் எதனை இழந்தோம்? எதனைப் பெற்றோம்? என்று நம்பிக்கையாளர் உலகியல் அடிப்படையில் பார்க்க வேண்டும். அவரது உலகியல் நிலையில் என்ன மேம்பாடு உருவானது? அல்லது மார்க்க ரீதியிலும் ஆன்மீக நிலையிலும் அவர் என்ன இழந்தார்? எதனைப் பெற்றார்? என்று அவர் ஆய்வு செய்ய வேண்டும். அவர் மார்க்க மற்றும் ஆன்மீக அடிப்படையில் பார்த்தாலும் கூட இந்த தகுதியை அடிப்படையாக வைத்து பார்க்க வேண்டும்? அதன் மூலம், தான் இழந்தது என்ன? பெற்றது என்ன? என்பது அவருக்கு தெரிய வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். நமக்கு அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் மஹ்தியையும் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளான். அன்னார் நமக்கு முன் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் போதனைகளின் சுருக்கத்தை எடுத்து வைத்து விட்டார்கள். நம்மிடம் இந்த தரத்தை கண் முன் வையுங்கள். அதன் மூலம் நீங்கள் வாழ்வின் நோக்கத்தைப் பெற்று விட்டீர்களா? அல்லது அதனை முழுமைப்படுத்த முயற்சி செய்தீர்களா? இல்லையா? என்பது தெரிய வரும் என்று கூறியுள்ளார்கள். நீங்கள் இந்த தரத்தை முன்னிறுத்தினீர்கள் என்றால் சரியான நம்பிக்கையாளர் ஆக முடியும். இந்த நிபந்தனையின்படி நடந்தீர்கள் என்றால் சரியான பொருளில் ஈமானைப் பேண முடியும்.

ஒவ்வோர் அஹ்மதியிடமும் அன்னார் பைஅத் உடன்படிக்கை வாங்கியுள்ளார்கள். இந்த பைஅத் உடன்படிக்கையில் பைஅத் உடன்படிக்கையை நம்முன் வைத்தவாறு ஒரு செயல் திட்டத்தை நம்மிடம் தந்து விட்டார்கள். அதன்படி செயல்படுவதற்காக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு வருடமும் ஓர் ஆய்வை அவர் மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பையும் நம்மீது அன்னார் வைத்துள்ளார்கள். ஆகவே, நாம் வருடத்தின் கடைசி இரவையும் புதிய வருடத்தையும் இந்த ஆய்வு மற்றும் துஆவின் மூலமே தொடங்கினோம் என்றால், நமது நல்ல முடிவை தக்க வைத்தவர்கள் ஆவோம். நாமும் கூட இந்த வெளிப்படையான வாழ்த்துச் செய்திகள் உலகியல் ரீதியான பேச்சுக்களின் மூலம் புது வருடத்தைத் தொடங்கினோம் என்றால் நாம் இழந்தது அதிகமாகவும் பெற்றது ஒன்றுமில்லை என்றும் ஆகி விடும் அல்லது மிகக் குறைவாகவே பெற்றிருப்போம். பலவீனங்கள் இருக்கின்றன என்றால் நமது ஆய்வு நமக்கு திருப்தி அளிக்கத்தக்கதாக இல்லையென்றால் நாம் இந்த துஆவை செய்ய வேண்டும். அல்லாஹ் நமது வரக்கூடிய ஆண்டை கடந்த வருடத்தைப் போன்று ஆன்மீக பலவீனத்தைக் காட்டிய ஆண்டாக இருக்கச் செய்யாமல் இருப்பானாக! மாறாக, நமது ஒவ்வோர் அடியும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எடுத்து வைக்கப்பட்ட அடியாக இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு நாளும் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செல்லக் கூடியதாக இருக்க வேண்டும்.

நமது பகலும் இரவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் பக்கம் எடுத்துச் செல்வதாக இருக்க வேண்டும். இந்த உடன்படிக்கை நம்மிடம் **இந்தக் கேள்வியை கேட்கிறது.** நாம் இணை வைக்க மாட்டோம் என்று எடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினோமா? சிலைகள், சூரியன், சந்திரன் ஆகியவற்றை வணங்குகிற ஷிர்க் அல்ல. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய கூற்றிற்கு ஏற்ப அந்த இணை வைப்பு செயல்களில் 'காட்டுதல்' உருவாகிற ஷிர்க் ஆகும். அந்த ஷிர்க் மறைவான விருப்பங்களால் பீடிக்கப்படுகின்ற ஷிர்க் ஆகும். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 800-801 மஹ்மூது பின் லபீத் ஹதீஸ் எண் 24038. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது) நாம் நமது தொழுகைகள், நோன்புகள், ஸகாத்துகள், நமது பொருள் தியாகங்கள், நமது படைப்பின சேவைப் பணிகள், நமது ஜமாஅத் பணிகளுக்கான நேரத்தை செலவழிப்பது, இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக அல்லாமல் அல்லாஹ் அல்லாதவர்களை சந்தோஷப்படுத்துவதற்காக அல்லது உலகம் பார்ப்பதற்காக செய்யப்படவில்லையே? நமது உள்ளத்தில் மறைந்துள்ள ஆசைகள் இறைவனுக்கு எதிராக எழுந்து நிற்கவில்லையே?

இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்தி –யுள்ளார்கள். தவ்ஹீத் என்பது உள்ளத்தில் பல சிலைகளை வைத்துக் கொண்டு வாயினால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதற்குப் பெயரல்ல. மாறாக எவர் பணிகள், தந்திரம், சூழ்ச்சி, திட்டங்கள் ஆகியவற்றிற்கு இறைவனின் அந்தஸ்தைத் தருகிறாரோ அல்லது வேறு ஏதாவது மனிதன் மீது இறைவன் மீது வைக்க வேண்டிய அளவுக்கு முற்றிலும் நம்பிக்கை வைக்கிறாரோ அல்லது இறைவனுக்கு கொடுக்க வேண்டிய மகத்துவத்தை தனது நஃப்ஸிற்கு தருகிறாரோ இந்த அனைத்து நிலையிலும் இறைவனின் பார்வையில் அவர் சிலை வணங்கி ஆவார். (சிராஜுத்தீன் ஈஸாஹீ கே சார் சவாலோன் கா ஜவாப். ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 349)

ஆக, இந்தத் தகுதியை கண் முன் நிறுத்தியவாறு ஆய்வு செய்வது அவசியமாகும். அதற்குப் **பிறகு இன்னொரு கேள்வி:** நாம் கடந்த வருடம் பொய்யிலிருந்து முழுமையாகத் தூய்மையாகி முழுமையான உண்மையின் மீது நிலைநின்றவாறு கழித்தோமா? அதாவது உண்மையை வெளிப்படுத்தும் நிலையில் நமக்கு நஷ்டம்தான் ஏற்படும் என்ற நிலையிலும் கூட உண்மையை விடாதிருந்தோமா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இதற்கான அளவுகோலை இவ்வாறு நிர்ணயித்திருக்கிறார்கள். மனிதன் தனது சுய நலத்திற்காக உண்மையைப் பேசுவதிலிருந்து அவரை தடுக்கின்ற அந்த செயலை விட்டு விடாத வரை அவர் உண்மை பேசுபவராக முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: உண்மை பேசுவதற்கான மிகவும் சரியான சந்தர்ப்பம் அதுதான். அதில் அவரது உயிர், பொருள், கண்ணியம் போய் விடுவதற்கான சாத்தியம் இருக்கின்றது. (இஸ்லாமி உஸுல் கீ ஃபிலாஸஃபி ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 380)

**பிறகு இன்னொரு கேள்வி:** நாம் அசுத்தமான எண்ணங்கள் உள்ளத்தில் உருவாகக்கூடிய நிகழ்ச்சிகளிலிருந்து விலகினோமா? அதாவது இக்காலத்தில் டி.வி, இன்டர்நெட் போன்றவற்றில் எண்ணங்களை அசுத்தமாக்கக் காரணமான நிகழ்ச்சிகள் உள்ளன. அவற்றிலிருந்து விலகி இருந்தீர்களா? நாம் இந்த ஊடகங்கள் மூலம் அசுத்தமான படங்களை பார்க்கிறோம் என்றால் பைஅத் உடன்படிக்கையிலிருந்து விலகுகிறோம். நமது நிலைமை கவலை கொள்ளத்தக்கது. ஏனெனில் இவை மனிதனை ஒருவகை விபச்சாரத்தின் பக்கம் எடுத்துச் செல்கின்றன.

**பிறகு ஒரு கேள்வி:** நாம் தீய பார்வையிலிருந்து தப்பித்தறக்காக சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்தோமா? செய்து கொண்டு இருக்கிறோமா? தீய பார்வையைப் பொருத்தவரை இக்கட்டளை ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது. ஏனெனில் நேரடியாக தெளிவாகப் பார்ப்பதன் மூலம் தீய பார்வைக்கான சாத்தியங்கள் உள்ளன. எனவே பார்வையை கீழ் நோக்கி வையுங்கள். கஸ்ஸே பஸர்–ஐ கடைபிடியுங்கள்.

**அடுத்த கேள்வி:** நாம் கட்டுப்பாடாமை மற்றும் தீமையான எல்லா காரியங்களிலிருந்தும் இவ்வருடத்தில் தப்பித்திருக்க முயன்றோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கையாளர் ஏசிப் பேசுவதில் ஈடுபட்டால், அது தீமையாகும். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 153 முஸ்னது அஹ்மது பின் மஸ்வூது ஹதீஸ் எண் 4178. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது) சண்டை சச்சரவுகள் கடுமையாக நடக்கும்போது ஒருவர் மற்றவரைப் பார்த்து கடுமையான வார்த்தைகள், தீய வார்த்தைகளைக் கூறி விடுகிறார். ஒரு நம்பிக்கையாளர் மற்ற நம்பிக்கையாளரிடம் இதனை செய்வார் என்றால் அது தீமையாகும். எவரிடம் இதனை செய்தாலும் அது தீமையாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வியாபாரிகள் தீயவர்கள் ஆவர். அப்போது வியாபாரம் செய்வது அனுமதிக்கப்பட்டதல்லவா? என்று கேட்கப்பட்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இம்மக்கள் ஏமாற்று வாணிபம் செய்கிறார்கள்; பொய் சொல்கிறார்கள்; சத்தியமிட்டு சத்தியமிட்டு விலையை ஏற்றுகிறார்கள் என்று கூறினார்கள். இவ்வாறு அன்னார் நன்றியும் பொறுமையும் காட்டாதவர்களையும் தீயவர்கள் என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 385-386 ஹதீஸ் அப்துர் ரஹ்மான் பின் ஷிப்ல் ஹதீஸ் எண் 15752-15753. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது) இதுவே தீமையில் இருந்து தப்பிப்பதற்கான ஆழமான பார்வையாகும்.

**பிறகு இன்னொரு கேள்வி:** இதனை நாம் நம்மிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் நம்மை ஒவ்வோர் அநீதியிழைப்பதில் இருந்தும் பாதுகாத்து வைத்தோமா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருடைய ஓர் அடி நிலத்தையாவது ஒருவர் அபகரித்தால் அல்லது ஒருவருடைய ஒரு மண் கட்டியையாவது தவறான முறையில் எடுத்தால் அதுவும் அநீதியாகும். (சஹீஹ் புகாரி கிதாப் ஃபில் மஸாலிமி வல் கஸபி பாபு இஸ்முன் மன் ஸலம ஷய்அன் மினல் அர்ழி ஹதீஸ் எண் 2452) இது பாவமிழைப்பதாகும். இந்த தரத்தில் நாம் நம்மை வைக்க வேண்டும்.

பிறகு ஒரு கேள்வி கேட்க வேண்டும். நாம் நம்மை எல்லா விதமான நம்பிக்கை மோசடியிலிருந்தும் பாதுகாத்து வைத்தோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் நம்பிக்கை மோசடி செய்தாரோ அவர் மீது கூட நம்பிக்கை மோசடி செய்யக் கூடாது. (சுனன் அபீ தாவூது கிதாபுல் புயூஃ ஃபிர்ரஜுலி யஃகுஸு ஹக்கஹு மன் தஹ்த யஹிதி ஹதீஸ் எண் 3534) இதுவே அந்த தரம் ஆகும்.

பிறகு நாம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். நாம் எல்லா வகையான குழப்பம் விளைவித்தலிலிருந்தும் தப்பிக்க முயற்சி செய்தோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதிகமான விஷமிகள் குழப்பம் ஏற்படுத்துபவர்களேயாவர். இந்த குழப்பவாதிகள் புறம் பேசுவதன் மூலம் குழப்பம் விளைவிக்கிறார்கள். அங்கு நடப்பதை இங்கு வந்து பரப்புவது இங்கு நடப்பதை இன்னோரிடத்தில் பரப்புவது போன்ற செயல்களை இவர்கள் செய்கின்றனர். மேலும், இம்மக்கள் நேசம் கொண்டவர்களிடத்தில் பிரிவை ஏற்படுத்திகிறார்கள். இவர்கள் குழப்பவாதிகள் ஆவார்கள். கட்டுப்பட்டு நடப்பவர்கள், ஜமாஅத் அமைப்பின் ஒவ்வொரு கருத்தையும் ஏற்பவர்கள், மார்க்கத்தில் ஒவ்வொரு

கூற்றையும் ஏற்பவர்கள் ஆகிய மக்களை இவர்கள் தவறான காரியங்களைச் செய்ய வைத்து விடுகின்றனர். அவர்களை பாவம் செய்ய வைக்க முயற்சி செய்கிறார்கள். இவர்கள் குழப்பவாதிகள் ஆவர். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 914 ஹதீஸ் அஸ்மா பின்த் ஸயீது ஹதீஸ் எண் 28153. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது) குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்கான அந்த தரம் இதுவேயாகும்.

பிறகு கேள்வி: எல்லா வகையான கிளர்ச்சியான செயல்களிலிருந்து நாம் தப்பித்திருந்தோமா? பிறகு கேள்வி நாம் நமது மன எழுச்சிகளில் மிகைக்கப்பட்டு விடவில்லையே? இக்காலத்தில் எல்லா புறமும் வெட்கமின்மை பரவியுள்ளது. இந்த மன எழுச்சிகளிலிருந்து தப்பிப்பதும் ஒரு ஜிஹாத் ஆகும்.

பிறகு கேள்வி ஐவேளை தொழுகைகளைப் பேணி வருகிறோமா? இவ்வருடத்தில் முறைப்படி தொழுது வந்துள்ளோமா? இதனை திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் இறைவன் போதனை செய்துள்ளான். இன்னும் சொல்வதாயின், அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்; எச்சரித்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகைகளை விட்டு விடுவது மனிதனை ஷிர்க் மற்றும் குஃப்ர் (இணை வைத்தல் மற்றும் மறுப்பு) –க்கு அருகில் கொண்டு சேர்த்து விடுகிறது. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஈமான் பாபு பயானு இத்லாக்கி இஸ்மில் கு∴ப்ரி அலா மன் தரகஸ்ஸலாத்தி ஹதீஸ் எண் 82)

பிறகு நாம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். தஹஜ்ஜுத் தொழுவதில் நமக்கு கவனம் இருந்ததா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தில் வழி காட்டியுள்ளார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை வழக்கமாகவும், முறையாகவும், பேணுவதற்கு முயற்சி செய்யுங்கள். இது ஸாலிஹீன் உடைய வழிமுறையாகும். இது இறை நெருக்கம் பெறும் வழியாகும். இந்த வழக்கம் பாவத்திலிருந்து தடுக்கிறது. தீமைகளை முடிவுக்கு கொண்டு வந்து விடுகிறது. பலவீனங்களை அகற்றுகிறது. மேலும் உடலியல் நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது (சுனன் திர்மிதி கிதாபுத் த∴வாத் பாபு ∴பீ துஆயின் நபிய்யி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஹதீஸ் எண் 3549) என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு நாம் ஒரு கேள்வி கேட்கவேண்டும். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதில் முழுமையைப் பேணி முயன்றுள்ளோமா? செய்கிறோமா? இது இறைவனின் சிறப்பான நம்பிக்கையாளர்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். இது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழியும் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தரூது ஓதப்படாத துஆக்கள் பூமிக்கும் வானத்திற்கும் இடையில் நின்று விடுகின்றன. (சுனன் திர்மிதி கிதாபுஸ் ஸலாத்தி அப்வாபுல் வித்ரி பாபு மா ஜாஆ ∴பீ ∴பஸ்லுஸ்ஸலாத்தி அலன்னபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் ஹதீஸ் எண் 486) நீங்கள் தரூது ஓதாமல் துஆ செய்கிறீர்கள் எனில் உங்களிடமிருந்து எழுகிற துஆக்கள் வானம் வரை செல்வதில்லை. ஏனெனில், அல்லாஹ் கற்றுத் தந்த முறையில் அது செய்யப்படவில்லை. வானம் வரை கொண்டு செல்லும் வழியாவது அத்துடன் தரூதும் ஓதப்பட வேண்டும்.

பிறகு நாம் கேள்வி கேட்க வேண்டும். நாம் முறைப்படி இஸ்திக்ஃபார் செய்து வருகிறோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் வழக்கமாக பாவமன்னிப்புத் தேடுவதில் நெருங்கி இருப்பாரோ அதாவது முறைப்படி பிழை பொறுக்குமாறு துஆ செய்வாரோ அவரை ஒவ்வொரு நெருக்கடிகளிலிருந்தும் வெளியேறுவதற்கான வழியை அல்லாஹ் ஏற்படுத்தித் தருவான். ஒவ்வொரு கஷ்டத்திலிருந்து வசதியை ஏற்படுத்துவான். அவர் கற்பனை கூட செய்யாத வழியிலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்தை வழங்கி விடுகிறான். (சுனன் அபீ தாவூது அப்வாபுல் வித்ரி பாபு ∴பில் இஸ்திக்∴பாரி ஹதீஸ் எண் 1518)

பிறகு கேள்வி அல்லாஹ்வை புகழ்வதில் நமக்கு கவனம் இருந்ததா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை புகழாமல் ஆரம்பிக்கப்படுகிற பணி குறை உடையதாகி விடுகிறது; தாக்கமற்றதாகி விடுகிறது. (சுனன் இப்னு மாஜா கிதாபுன்னிகாஹ் பாபு குத்பதின்னிகாஹ் ஹதீஸ் எண் 1894) நாம் நம்மவர், மற்றவர் அனைவருக்கும் எந்த ஒரு கஷ்டமும் தருவதிலிருந்து விலகி இருந்தோமா? நமது கை, நமது நாவு மற்றவருக்கு கஷ்டம் தருவதிலிருந்து விலகி இருந்ததா? மற்றவர்கள் தவறுகளை பொறுத்துக் கொண்டு நாம் மன்னிப்பு மற்றும் கண்டும் காணாமையைப் பயன்படுத்தி வந்தோமா? எளிமை, பணிவு ஆகியவை நம்மை பிரித்துக் காட்டுவையாக இருந்தனவா? மகிழ்ச்சி, துயரம், வசதி, வறுமை ஆகிய எல்லா நிலையிலும் இறைவனுடன் நாம் நன்றி உணர்வுள்ள தொடர்பு கொண்டிருந்தோமா? நம்மிடம் முறையீடு உருவாகவில்லையே?அல்லாஹ் ஏன் என் துஆவை ஒப்புக் கொள்ளவில்லை? நான் ஏன் இந்த கஷ்டத்தில் போடப்பட்டேன்? என்று மனிதன் முறையிட்டால் அவன் நம்பிக்கையாளனாக இருக்க முடியாது.

பிறகு இந்த கேள்வி: நாம் எல்லா வகையான சடங்குகள் மனதில் பட்ட காரியங்களைச் செய்வதிலிருந்தும் முழுமையாக விலகி இருக்க முயன்றிருந்தோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சடங்குகள் மற்றும் பித்அத்துகள் உங்களை வழிகேட்டின் பக்கம் எடுத்துச் செல்கின்றன. அதிலிருந்து விலகுங்கள். (சுனன் திர்மிதி கிதாபுல் இல்மு பாபு மாஜா ∴பில் அஹஸி பிஸ்ஸுன்னத்தி வ இஜ்தினாபில் பதயி ஹதீஸ் எண் 2676)

பிறகு கேள்வியாவது: திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) உடைய கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்களை முழுமையான முறையில் கடைபிடிக்க முயற்சித்து வந்தோமா?

பிறகு கேள்வி: தற்பெருமையை முற்றிலுமாக விட்டோமா? அதனை விடுவதற்கு முயற்சி செய்தோமா? ஷிர்க்கிற்குப் பிறகு மிகப்பெரும் துன்பம் இந்த கர்வமும் ஆணவமும் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆணவக்காரர் சொர்க்கத்தில் நுழையமாட்டார். ஆணவம் என்பது மனிதன் உண்மையை மறுப்பதும், மக்களை இழிவாகக் கருதுவதும், அவர்களை இழிவான கண் கொண்டு அற்பமாகப் பார்ப்பதும், அவர்களிடம் தவறாக நடப்பதும் ஆகும். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஈமான் பாபு தஹ்ரீமுல் கிப்ரி வ பயானஹு ஹதீஸ் எண் 91)

பிறகு கேள்வியாவது: நாம் நன்னடத்தையில் உயர்ந்த தகுதியை எட்ட முயன்றோமா? நாம் சகிப்புத்தன்மை மற்றும் எளிமையை மேற்கொள்ள முயன்றோமா? எளியவர்களின் அந்தஸ்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பார்வையில் எத்தகையது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! என்னை ஏழையாக இருக்கும் நிலையில் உயிருடன் வைப்பாயாக! ஏழையாக இருக்கும் நிலையில் மரணத்தை கொடுப்பாயாக! என்னை ஏழைகளின் கூட்டத்திலிருந்து எழுப்புவாயாக! (சுனன் இப்னு மாஜா கிதாபுஸ் ஸுஹது பாபு மஜாலிஸதுல் ∴புகராயி)

பிறகு ஒரு கேள்வி: ஒவ்வொரு நாளும் நமக்குள் மார்க்கத்தில் வளர்ச்சி பெறவும், அதன் கண்ணியத்தையும் மகத்துவத்துவத்தையும் நிலைநாட்டு –பவராகவும் நம்மை ஆக்குகிறதா? மார்க்கத்திற்கு உலகை விட முக்கியத்துவம் தரும் வாக்குறுதியை நாம் அதிகமாக கூறுகின்றோம். அது வெறும் வாய் வார்த்தையாக இருக்கவில்லையே?

பிறகு ஒரு கேள்வி: இஸ்லாத்தின் மீதுள்ள நேசத்தில் நாம் முன்னேற முயன்றுள்ளோமா? நமது பொருளை விட அதற்கு மேன்மை தந்தோமா? தமது கண்ணியத்தை விட அதற்கு மேன்மை தந்தோமா? நமது பிள்ளைகளை விட அதனை அதிகம் நேசத்திற்குரியதாகக் கருதினோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் என்னிடம் இஸ்லாத்தை வழங்கி அனுப்பினான். இஸ்லாம் என்பது நீங்கள் உங்களை முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்படைப்பதாகும். பொய்த் தெய்வங்களை விட்டு விலகி தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். இதுவே இஸ்லாம் ஆகும். (கன்ஸுல் உம்மால் தொகுதி 1 பக்கம் 152 கிதாபுல் ஈமானி வல் இஸ்லாமி மின் கிஸ்மில் அ∴ப்வாலி. ∴பீ ∴பஸ்லிஸ்ஸானி ∴பீ ஹகீகத்துல் இஸ்லாமி ஹதீஸ் எண் 1378. தாருல் குதுபில் இல்மிய்யா. 2004 -ல் பைருத்தில் வெளியிடப்பட்டது)

பிறகு கேள்வி: நாம் படைப்பினங்களின் மீது அன்பு செலுத்துவதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்பவர்களாக இருந்தோமா? பிறகு கேள்வி : நமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தி இறைபடைப்பினங்களுக்கு பயன் தர முயன்றோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எல்லா படைப்பினங்களும் இறைவனது குடும்பமாகும். (அல்மு∴ஜமுல் அவ்ஸது பாகம் 4 பக்கம் 153 மின் இஸ்முஹு முஹம்மது ஹதீஸ் எண் 5541. தாருல் ∴பிக்ரி அம்மானில் 1999-ல் வெளிடப்பட்டது) ஆகவே அல்லாஹ்வுக்கு தனது படைப்பினங்களுள் அம்மனிதரே மிகவும் விருப்பமானவர். அவர் அவனது குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறார். அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொள்கிறார்.

பிறகு கேள்வி: நீங்கள் இவ்வாறு துஆ செய்து கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளிடத்தும் துஆ செய்ய போதனை செய்து வந்தீர்களா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கீழ்ப்படிவதன் தரம் நம்மிடம் எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டும். அதுவும் உயர் தரத்துடன் கட்டுப்பட்டு நடப்போம் என்று துஆ செய்து கொண்டும், பிள்ளைகளுக்கு போதனை செய்து கொண்டும் இருந்தோமா? பிறகு அதில் முன்னேறவும் வேண்டும்.

பிறகு இன்னொரு கேள்வி: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நாம் செய்த சகோதரத் தொடர்புக்கு முன்னால் பிற உலகியல் தொடர்புகள் எல்லாம் அதற்கு முன் ஒன்றுமற்றதாகி சாதாரணமாகி விடும் அளவுக்கும் இருந்ததா?

பிறகு ஒரு கேள்வி: அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் பற்று, விசுவாசத்துடன் நிலை நிற்பதற்காக வருடம் முழுவதும் துஆ செய்து வந்தோமா? குழந்தைகளுக்கு கிலாஃபத்துடன் தொடர்பில் இருக்கவும் விசுவாசத்துடன் அத்தொடர்பை வைத்திருக்குமாறும் கவனமூட்டி வந்தோமா? அதற்காக துஆ செய்து வந்தோமா? அவர்களிடம் அதில் கவனம் உருவானதா?

பிறகு ஒரு கேள்வி: காலத்தின் கலீஃபா மற்றும் ஜமாஅத்திற்காக முறைப்படி துஆ செய்து வந்தீர்களா? இதில் பெரும்பாலான கேள்விகளுக்கு நேர்மறை பதிலுடன் இவ்வருடம் கழிந்திருக்கும் என்றால், சிறிது பலவீனம் இருந்தாலும் நாம் அதிகமாக பெற்றுள்ளோம். இவற்றுள் அதிகமான கேள்விகளுக்கான பதில் எதிர்மறையாக இருக்கும் என்றால் நமது நிலை கவலைப்படத்தக்கதாகும். நமது நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டும். இந்த இழப்பை சரிசெய்வதற்கான வழி அல்லது நிவர்த்தி என்னவென்றால், இந்த வருடத்தின் இந்தக் கடைசி இரவில் துஆ செய்யுங்கள். உறுதியான எண்ணம் கொள்ளுங்கள். ஓர் உறுதி எடுங்கள். குறிப்பாக புதிய வருடத்தின் தொடக்கத்தில் இந்த துஆவை செய்யுங்கள். அல்லாஹ் நமது கடந்த கால பலவீனங்களையும் குறைகளையும் மன்னிப்பானாக! புதிய வருடத்தில் அதிகமாக பெறுவதற்கான வாய்ப்பளிப்பானாக! நாம் இழப்பிற்குரியவர்களாக இருக்கக் கூடாது. நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்ற நம்பிக்கையாளர்களுடன் இணைவோமாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேற்கோளை எடுத்து வைக்கிறேன். அதில் அன்னார் தமது ஜமாஅத்திற்கு போதனையை வழங்கியுள்ளார்கள். அதனை ஒரு பிரசுரத்தின் வடிவில் வெளியிட்டார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வருடத்தில் வருகை தந்துள்ள எனது ஜமாஅத்தினர் அனைவரும் அல்லது தத்தமது இடங்களில் வசிப்பவர்களும் இந்த போதனையை கவனத்துடன் கேளுங்கள். எனது இயக்கத்தில் நுழைந்து என்னுடன் இணைந்திருக்க விரும்பி தொடர்பு வைத்திருப்பவர்களின் நோக்கம் என்னவென்றால் நன்னடத்தை, நற்செயல், தக்வாவின் உயர் தரத்தை அடைவதாகும். எந்தக் குழப்பமும் அல்லது விஷமமும், தீய நடத்தையும் அவரது அருகில் வரக்கூடாது. அவர் ஐவேளை தொழுகையைப் பேணுபவராக இருக்க வேண்டும். அவர் பொய் சொல்லக் கூடாது. எவருக்கும் நாவால் தொல்லை கொடுக்கக் கூடாது. எவ்வகையான தீய செயலைச் செய்யவும் முன் வரக் கூடாது. எந்த விஷமம், அநீதி, குழப்பம் விளைவித்தல் போன்ற எண்ணமும் உள்ளத்தில் வருதல் கூடாது. சுருக்கமாக, எல்லா வகையான பாவங்கள், குற்றங்கள் செயலிலோ பேச்சிலோ கூடாது. எல்லா வகையான மன எழுச்சிகளிலிருந்து விலகி இருங்கள். எல்லா வகையான பாவத்திலிருந்தும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

அன்னார் கூறினார்கள்: தூய உள்ளம் உடையவரும், விஷமம் இல்லாதவரும், எளிமை உடையவருமான இறை அடியாராக ஆகி விடுங்கள். எந்த தவறான நடத்தைகளும் அவரிடம் இருக்கக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: எல்லா மனிதர்களின் மீது அனுதாபத்துடன் நடந்து கொள்வது அவருடைய இலக்கணமாக இருக்க வேண்டும். நம்பிக்கையாளர் நம்பிக்கையாளர்களுக்கிடையே மட்டும் அனுதாபம் காட்டுதல் போதாது. எல்லா மனிதர்களின் மீதும் அனுதாபம் கொள்வது அவரது இலக்கணமாக இருக்க வேண்டும். மேலும் இறைவனுக்கு அஞ்சுங்கள். தமது நாவுகள், கைகள், தமது உள்ளங்களின் எண்ணங்களை ஒவ்வொரு தூய்மையற்ற வழிமுறைகள் மற்றும் நம்பிக்கை மோசடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஐவேளை தொழுகைகளை மிகவும் கவனத்துடன் நிலைநிறுத்துங்கள். அநீதி, வரம்பு மீறுதல், அடக்குமுறை செய்தல், கையூட்டு, உரிமைகளைப் பறித்தல், ஒருதலைபட்சமாக நடந்து கொள்வது ஆகியவற்றில் இருந்து விலகுங்கள்.

எந்த தீய நட்புகளுடனும் அமராதீர்கள். ஒரு மனிதர் அத்தகையவருடன் போய் வந்து இருக்கிறார் என்று தெரிய வருகிறது. இறைவனது கட்டளைகளைப் பேணாமலும் அல்லது அடியார்களின் உரிமையை மதிக்காமல் இருக்கிறார் அல்லது அநீதியான இயல்பு கொண்டவராக இருக்கிறார் அல்லது எந்த மனிதருடன் பைஅத் செய்து தொடர்பு வைத்துள்ளாரோ அவரைப் பற்றி உண்மையில்லாத காரணமில்லாத தீய வார்த்தைகளைப் பேசவும் தகாத வார்த்தைகளையும் அவதூறு கூறுபவராகவும் இட்டுக்கட்டும் வழக்கமும் வைத்துக் கொண்டு இறைவனின் அடியார்களை ஏமாற்ற விரும்புகிறார் என்பது தெரிய வந்தால் அத்தகைய தீமைகளை உங்களுக்கிடையிலிருந்து அகற்றுவதுடன் அத்தகைய மனிதரை விட்டு விலகுவது உங்கள் மீது கட்டாயமாகும். அம்மனிதர் ஆபத்தானவர் ஆவார். எம்மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராகப் பேசுவாரோ அவரது அருகில் அமர்வதிலிருந்தும் அவருடன் நட்பு வைப்பதிலிருந்தும் விலகுங்கள். ஏனெனில் இது ஆபத்தான விஷயமாகும்.

தப்லீக் செய்யக் கூடாது என்பது இதற்கு பொருளல்ல. இதன் பொருள் மற்றவர்களிடம் செய்ய வேண்டும். எவர்கள் நயவஞ்சக இயல்பும் தவறான பேச்சு கொண்டவர்களாகவும் இருந்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஏச்சுகளைத் தவிர வேறு எதுவும் பேசாமல், ஜமாஅத்திற்கு எதிராக பேசுவதிலும் மூழ்கி இருக்கிறார்களோ அவர்களை தவிர நல்லியல்பு கொண்டவர் கேட்கவும் செய்கிறார்கள். அவர்களிடம் தப்லீக் செய்யுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: எந்த மார்க்கம் அல்லது எந்த சமுதாய மற்றும் எந்த பிரிவினரைச் சார்ந்தவருக்கும் சேதம் விளைவிக்க எண்ணாதீர்கள். ஒவ்வொருவருக்காகவும் உண்மையான அறிவுரை கூறுபவராக இருங்கள். விஷமிகள், தீயவர்கள், குழப்பவாதிகள், தீய நடத்தை கொண்டவர்கள் ஒருபோதும் உங்கள் சபைகளில் வரக் கூடாது அல்லது உங்கள் இடங்களில் அவர்கள் இருக்கக் கூடாது. அவர்கள் எப்போதாவது உங்கள் தடுமாற்றத்திற்கு காரணமாகி விடுவர். அதிக நெருக்கத்தில் அத்தகையோர் இருந்தால் உங்களுக்கு தடுமாற்றம் ஏற்படும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் தொடக்கத்திலிருந்து கூறி வந்த இந்த விவகாரங்கள் இந்த நிபந்தனைகள், இந்த கருத்துக்களை நீங்கள் செயல்படுத்த வேண்டும். உங்கள் சபைகளில் எந்த அசுத்தம், எள்ளி நகையாடுதல், நகைப்பு கூடாது. நல்லுள்ளம், தூய இயல்பு, நல்லெண்ணம் கொண்டவாறு பூமியில் நடந்து செல்லுங்கள். நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு விஷமமும் எதிர்க்கத் –தக்கதல்ல. எனவே, பெரும்பாலான நேரங்களில் மன்னிப்பை பயன்படுத்துங்கள். எல்லா இடங்களும் எதிர்த்து நிற்பதற்குரியவை அல்ல. எல்லா இடத்திலும் எதிர்த்து நிற்க வேண்டிய தேவையில்லை. மன்னிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். பொறுமை, சகிப்புத்தன்மையைப் பயன்படுத்துங்கள். அமைதியற்ற முறையில் எவரையும் தாக்காதீர்கள். மன உணர்வுகளை அடக்கி வையுங்கள். விவாதமோ, மார்க்க உரையாடல்களோ நடைபெற்றால் மென்மையான வார்த்தைகளில் நாகரிகமான முறையில் அதை செய்யுங்கள். உரையாட வேண்டுமா உரையாடுங்கள்; விவாதம் செய்ய வேண்டுமா விவாதம் செய்யுங்கள். ஆனால் நாகரிகமான முறையில் செய்யுங்கள். ஒருவர் முட்டாள்தனமாக நடந்து கொண்டால் ஸலாம் என்று கூறி விட்டு உடனே எழுந்து விடுங்கள். நீங்கள் தொல்லை கொடுக்கப்பட்டால், ஏசப்பட்டால், உங்கள் மீது தீய வார்த்தைகள் கூறப்பட்டால் எச்சரிக்கையாக இருங்கள். முட்டாள்தனத்திற்கு எதிராக முட்டாள்தனமாகவே நடந்து கொள்ளக் கூடாது. அவ்வாறென்றால் நீங்கள் அவர்களைப் போன்றவராகி விடுவீர்கள். இறைவன் உங்களை எத்தகைய ஜமாஅத்தாக ஆக்க விரும்புகிறான் என்றால் நீங்கள் முழு உலகிற்கும் நன்மை மற்றும் நம்பிக்கையின் முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

ஆக, நீங்கள் உங்களுக்கிடையில் இருந்து அத்தகைய மனிதரை விரைவில் வெளியேற்றி விடுங்கள். தீமை, விஷமம், குழப்பத்தை ஏற்படுத்துதல், தீய நஃப்ஸின் முன்மாதிரியாக இருப்பவரை வெளியேற்றி விடுங்கள். எவர் நமது ஜமாஅத்தில் ஏழ்மை, நன்மை, தீயவற்றிலிருந்து விலகுதல், சகிப்புத்தன்மை, மென்மையான பேச்சு, நல்லியல்பு, நன்னடத்தை ஆகியவற்றுடன் இருக்க முடியவில்லையோ அவர் விரைவில் நம்மை விட்டு பிரிந்து விடட்டும்! அத்தகைய மனிதன் நம்முடன் இருப்பதை இறைவன் விரும்பவில்லை. நிச்சயமாக அவர் தமது துர்பாக்கியத்திலேயே மரணிப்பார். ஏனெனில் அவர் நன்மையின் வழியை மேற்கொள்ளவில்லை. எனவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையிலேயே நல்லுள்ளம், எளிய இயல்பு, நம்பிக்கை உடையவராக இருங்கள். ஐவேளை தொழுகை மற்றும் நல்லொழுக்க நிலைமைகளைக் கொண்டு நீங்கள் கண்டறியப்படுவீர்கள். நடுவில் தீய விதைகள் நிலை நிற்க முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: உங்கள் உள்ளம் மோசடிகளிலிருந்து தூய்மையாகவும், உங்கள் கைகள் அநீதியிலிருந்து தவிர்ந்ததாகவும் உங்கள் கண்கள் தூய்மையற்றதை விட்டு அகன்றதாகவும் இருக்க வேண்டும். உங்களுக்குள் நேர்வழி மற்றும் படைப்பினங்களின் மீது கருணை தவிர வேறெதுவும் கூடாது. என்னுடன் காதியானில் இருக்கிற நண்பர்கள் அவர்கள் தமது எல்லா மனித ஆற்றல்களின் மூலம் உயர்ந்த முன்மாதிரியைக் காட்டுவார்கள் என்று நம்புகிறேன். எவரது நிலைமைகள் ஐயத்திற்குரியவையாக இருக்குமோ அத்தகையோர் இந்த நல்ல ஜமாஅத்தில் கலந்திருப்பதை நான் விரும்பவில்லை அல்லது எவரது நடத்தைகளில் ஏதாவது ஒன்று ஆட்சேபனை செய்யக்கூடியதாக இருக்குமோ அத்தகையோர் அதிக கோபமுடையவராக இருப்பாரோ அல்லது வேறு ஏதாவது ஒரு வகையான தூய்மையின்மை அவரிடம் காணப்படுகிறதோ அவர் இந்த நல்ல ஜமாஅத்தில் இருப்பதை நான் விரும்பவில்லை. எனவே, நம் மீது கட்டாயக் கடமை என்னவென்றால், எவர் மீதும் எந்த வகையான அத்தகைய முறையீட்டைக் கேட்டோம் என்றால் அதாவது அவர் இறைவனின் கட்டளைகளை வேண்டுமென்றே வீணாக்குவதாகவும் அல்லது எள்ளி நகையாடக்கூடிய வீணான சபைகளில் எதிரிகளுடன் போய் அமர்வதாகவும் அல்லது வேறு ஏதாவது தீய நடத்தை அவரிடம் இருப்பதாகவும் இருந்தால் அவர் நமது ஜமாஅத்தை விட்டு அகற்றப்படுவார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், ஒரு வயல் மிகவும் உழைப்புடன் ஆயத்தம் செய்யப்படுகிறது; வளர்க்கப்படுகிறது. அத்துடன் பயனற்ற களைகளும் வளர்கின்றன. அவையோ வெட்டி எரிப்பதற்கு தகுதியானவை ஆகும். அதுபோன்றே இயற்கை சட்டம் செயல்பட்டு வருகிறது. இதுபோன்றே நமது ஜமாஅத்தும் இவ்விஷயத்தில் விதிவிலக்கல்ல. எவர்கள் உண்மையான முறையில் நமது ஜமாஅத்தில் இணைந்துள்ளார்களோ அத்தகையோரை இயல்பிலேயே தீமையை வெறுப்பவர்களாகவும் நன்மையை நேசிப்பவராகவும் இறைவன் ஆக்கி வைத்துள்ளான். அவர்கள் தமது வாழ்வின் மிகச்சிறந்த முன்மாதிரியை இம்மக்களுக்காக வெளிப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 46-49; 29 மே 1898 -ல் வெளியிடப்பட்ட பிரசுரம். பிரசுரத்தின் பெயர்: அப்னி ஜமாஅத் கோ முதனப்பி.். கர்னே கே லியே எக் ஸரூரி இஷ்திஹார்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த போதனை மற்றும் எச்சரிக்கையை முன்னிறுத்தியவாறு வாழ்வைக் கழிப்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நாம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருப்போமாக! நமது வாழ்வை இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக கழிப்பவராவோமாக! நமது வாழ்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப அமைத்தவாறு நமது வாழ்வின் நல்ல முன்மாதிரியை மக்களுக்கு முன்னெடுத்து வைப்பவராகவும் காட்டுபவராகவும் இருப்போமாக! அல்லாஹ் நமது பலவீனங்களை திரையிட்டவாறு நமக்கு அருட்கொடைகளை வழங்குவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட வெற்றிகளை நமக்கு காட்டுவானாக! புதிதாக வரக்கூடிய வருடம் பரக்கத்துகளைக் கொண்டு வரட்டுமாக! எதிரிகளின் திட்டங்கள் தோல்வி அடையட்டுமாக! ஜமாஅத்தின் மீது எதிர்ப்பு காட்டுவதற்காக என்ன திட்டங்களை அவர்கள் வளர்த்துக் கொண்டே செல்கிறார்களோ அவற்றை தோல்வியடையச் செய்வானாக!

பாகிஸ்தான் அஹ்மதிகள் இவ்வருடம் காதியான் மாநாட்டிற்குச் செல்ல முடியவில்லை. அதில் அவர்களுக்கு பெரும் வருத்தம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் இவர்களின் தாகத்தை தணிப்பதற்கான வழிவகைகளைச் செய்வானாக! அல்ஜஸாயிரில் வாழும் அஹ்மதிகளின் கஷ்டங்களையும் அகற்றுவானாக! அவர்களுள் சிலர் மீது தவறான வழக்குகள் போடப்பட்டுள்ளன. இப்போது அவர்கள் கைதிகளாக சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கு ஏற்பாடு செய்வானாக! எதிரிகள் தமது வரம்பு மீறல் மற்றும் அநீதியின் செயல்களில் முன்னேறும்போது நாமும் நமது நிலைமைகளை இறை திருப்திக்கேற்ப அமைத்தவாறு துஆவின் மீது அதிக அழுத்தம் தர வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

## ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் சிறப்பாக இருந்தது. குறிப்பாக பெண்களின் அந்தஸ்து தொடர்பாகவும் 'நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும்' என்பதைப் பற்றிய தூதுச் செய்தியையும் கேட்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

## 2016 -ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 -ஆம் தேதி ஜெர்மனியிலுள்ள Frankenthal நகரில் நடைபெற்ற நூர் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

- Mrs. Schfer என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: இன்று ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவிலிருந்து எனக்கு இஸ்லாத்தில் பெண்களுக்குரிய உரிமைகளின் உண்மை நிலை தெரிய வந்தது.
- Mr. Bemd Holger என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: ஜமாஅத்தைப் பற்றி அதன் பணிகளின் காரணமாக கடந்த 25 வருடங்களாக எனக்கு தெரியும். ஹுஸூர் அவர்களையும் சிறிது காலமாக நான் தொலைக்காட்சியில் பார்த்து வருகின்றேன். முதன் முறையாக அவர்களை நேரில் சந்தித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவர்களிடம் குறிப்பான ஒரு கம்பீரம் இருக்கின்றது. அவர்கள் கூறும் ஒவ்வொரு விஷயத்திலும் எனக்கு உடன்பாடு இருக்கின்றது.
- Dr. Ursula என்ற ஒரு விருந்தினர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: ஹுஸூர் அவர்களுக்கு அனைத்து அஹ்மதிகள் தொடர்பான பொறுப்பு இருக்கின்றது. ஆனால், Frankenthal போன்ற சிறிய ஜமாஅத்திற்காகவும் அவர்கள் தமது நேரத்தை வழங்கியுள்ளார்கள். இந்த அமைதியின் போதனையை மீண்டும் மீண்டும் கூறுவது மிகவும் அவசியமானதாகும். தனது குத்பா உரையின்போதும் அத்தகைய ஞானம் நிறைந்த விஷயங்களை அவர்கள் கூறியிருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். மக்களுக்கு அதன் தேவை இருக்கின்றது.
- Michelle Blaumeister என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: இந்த சுற்றுச்சூழல் மிகவும் நன்றாக இருக்கின்றது. அதைப் பற்றி விவரிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. இந்த சுற்றுச்சூழலில் சிறப்பான சில விஷயங்கள் உள்ளன. அவற்றைப் பற்றி வார்த்தைகளால் கூற முடியாது. நான் இங்கு இருக்கின்றேன். முழு நாளும் இந்த மக்களுடன் எனது நேரத்தைக் கழித்தேன் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு எத்தகையது என்றால் எல்லா மக்களுக்கும் அதனை நீங்கள் கேட்க வைக்க வேண்டும்.
- இரு விருந்தினர்கள் இவ்வாறு கூறினர்: எங்களுக்கு இதற்கான அழைப்பு கிடைத்த போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். இதற்காக நன்றி தெரிவித்தோம். அந்த இரு விருந்தினர்களும் உலகிலுள்ள மற்றவர்களுக்கு முஸ்லிம்கள் அமைதியை விரும்புபவர்கள் என்பதை தெரிவிப்பதற்காகவே முஸ்லிம்களை சந்திக்க வந்தனர். இறுதியில் அவர்கள் நன்கொடை இருந்த ஒரு கவரையும் வழங்கினர்.
- Protestant Church -ன் பாதிரியான Marting Henning என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: இஸ்லாத்திற்கும் கிறித்தவத்திற்கும் அதிகமான ஒப்புமை இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஏறக்குறைய ஒவ்வொரு விஷயத்திலும் தனக்கென்று ஒரு பார்வையை வைத்திருக்கின்றது. ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த மக்களும் இங்கு வந்திருக்கின்றனர் என்ற இந்த விஷயத்தைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நான்காவது கலீ:பா அவர்களை 20 வருடங்களுக்கு முன்னர் நான் பார்த்துள்ளேன். இத்தகைய அமைதியை விரும்பும் ஓர் அமைப்பை அதாவது கிலா:பத்தை இன்று சிரியாவில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதைப் பார்த்து நான் மிகவும் வேதனையடைகின்றேன்.
- Hiltrud Seiber என்ற ஓர் ஆசிரியை இவ்வாறு கூறினார்: இன்று ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ள போதனைகளை உலகில் பரப்ப வேண்டும். இன்றைய காலத்திற்கேற்ப திருக்குர்ஆனுக்கு விளக்கவுரை கூற வேண்டிய தேவை இருக்கின்றது.
- ஒரு விருந்தினர் அழைப்பு விடுத்ததற்காக நன்றி தெரிவித்தார். மேலும், ஹுஸூர் அவர்கள் உலகில் அமைதியை பரப்பக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக பெண்களின் உரிமைகள் தொடர்பாக ஜமாஅத்தின் பார்வையைக் கண்டு நான் வியப்படைந்தேன் என்று அவர் கூறினார்.
- Inge Gross என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் சிறப்பாக இருந்தது. குறிப்பாக பெண்களின் அந்தஸ்து தொடர்பாக அவர்கள் கூறியவை சிறப்பாக இருந்தது. இன்று வரை நான் இதனை இந்த பார்வையில் பார்க்கவில்லை.
- Dr. Reiner Schulze என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: மனிதனின் உரிமைகளைச் செலுத்துவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் பேசியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் Due Grunen என்ற அரசியல் கட்சியுடன் தொடர்புடையவன் ஆவேன். ஹுஸூர் அவர்களின் வார்த்தைகளைப் பரப்ப வேண்டிய தேவை இருக்கின்றது.
- Jurgen Cross என்ற விருந்தினர் இவ்வாறு கூறினார்: ஹுஸூர் அவர்கள் மிகவும் தெளிவாகப் பேசினார்கள். அவர்கள் எங்களுடன் சமமாக நின்றவாறு இவ்விஷயங்களைக் கூறியுள்ளார்கள். எங்களை தாழ்ந்தவர்களாகக் கருதியவாறு அவர்கள் பேசவில்லை. நான் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஹுஸூர் அவர்களை ஆண்டு மாநாட்டின்போது பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன். அத்தகைய ஒரு பிரமுகர் ஏன் எல்லாராலும் அறியப்படவில்லை? அத்தகைய ஒரு பெருந்தகையைப் பற்றி அறிந்திருப்பது எனது நற்பேறாகும். நான் இந்த சுற்றுச்சூழலைப் பார்த்து மிகுதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். குறிப்பாக கூடாரம் அலங்கரிக்கப்பட்டு இருக்கும் விதம், முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா, ஏனைய பொதுவான ஏற்பாடு ஆகிய அனைத்துமே எனக்கு பிடித்திருந்தது. எவ்வாறு எனக்கு வரவேற்பு அளித்தார்களோ அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விருந்தினர்களும் இங்குள்ள அஹ்மதிகளும் மிகவும் நல்லவர்கள். எவர்களுக்கு இந்த தூதுச் செய்தி தேவைப்படுகின்றதோ அவர்கள் ஒருபோதும் இங்கு வரமாட்டார்கள்.
- ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை அதுவும் குறிப்பாக இஸ்லாத்தின் பெண்களின் அந்தஸ்து தொடர்பாக அவர்கள் கூறியவற்றை ஒரு பெண் கேட்டு விட்டு மிகவும் வியப்படைந்தார். இந்த சொற்பொழிவிற்குப் பிறகு ஒவ்வொருவரது பார்வையும் மாறியிருக்கும் என்று அவர் நம்புகின்றார்.
- அஹ்மது மூஸா என்ற விருந்தினர் இவ்வாறு கூறினார்: இன்று இங்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் எடுத்துக் கூறப்பட்டன. ஊடகங்களில் கூறப்படுகின்ற விஷயங்கள் தவறானவையாகும். உள்ளூரிலுள்ள மக்களுக்காகவும் பள்ளிவாயில் இருக்கின்றது என்று ஹுஸூர் அவர்கள் கூறிய விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இஸ்லாத்தில் ஒற்றுமை ஏற்படுவதில்தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும்.
- Schuher Agiman என்ற விருந்தினர் இவ்வாறு கூறினார்: எனக்கு ஹுஸூர் அவர்களைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஹுஸூர் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது.
- Roswitha Osswald என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: Frankenthal -ல் நடைபெறுகின்ற இந்த அடிக்கல் நாட்டப்படுகின்ற நிகழ்ச்சியில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**
**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வஸிய்யத் என்ற இறை அமைப்பை தொடங்கினார்கள். வஸிய்யத்தின் அமைப்பானது கிலா∴பத்தின் கீழ் இயங்கி வருகின்ற எத்தகைய ஓர் அமைப்பு என்றால் அது மார்க்க மற்றும் ஆன்மீக சீர்திருத்தத்தை ஏற்படுத்துகிற ஓர் அமைப்பாகும். அத்துடன் உலகின் பொருளாதார மற்றும் வாழ்வாதாரத்தின் பிரச்சனைகளுக்கு அது சிறந்த தீர்வை எடுத்து வைக்கின்றது என்று கூறினார்கள். அவர்கள் இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீ∴பாக்களின் கட்டளைகளை எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு கீழ்க்காணும் கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அறிமுக சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

1) மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (நேபாள் ஜமாஅத்தின் துணைத் தலைவர்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: முதலில் நேபாளத்தில் மன்னராட்சி இருந்து வந்தது. மேலும் அங்கு தப்லீக் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இப்போது இங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளது. தொடர்ந்து கூறினார்கள்: நேபாளத்தில் அல்லாஹ்வின் அருளால் பல பணிகள் நடக்கின்றன. ஜமாஅத்தின் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பள்ளிவாயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஹோமியோபதி Dispensaries நிறுவப்பட்டுள்ளன. ஒரு நடுநிலைப் பள்ளியும் இயங்கி வருகின்றது. நேபாளத்தில் ஆண்டு மாநாடுகள் நடத்துவது ஆரம்பமாகி உள்ளது. திருக்குர்ஆன் நேபாள மொழியில் மொழியாக்கம் செய்யப்படுகின்றது. ஜமாஅத்தின் பிரசுரங்கள் நேபாள மொழியில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வருடம் நேபாளத்திலிருந்து 56 பேர் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

2) இரண்டாவதாக அறிமுக சொற்பொழிவு நிகழ்த்திய இந்தோனேஷியாவைச் சார்ந்த சியோனி அஸீஸ் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 25 டிசம்பர் 2015 -ல் நிகழ்த்திய தமது ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறினார்கள்: ஒரு நேரத்தில் மக்கள் தனி விமானங்கள் மூலம் காதியானுக்கு வந்து ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வார்கள்; அவ்வாறு நடைபெறுவது கூட தொலைவில் இல்லை என்று கூறினார்கள். இந்த வருடம் தனி விமானம் மூலம் காதியானுக்கு வந்து ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் நற்பாக்கியத்தை இந்தோனேஷியாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ பேருரையிலிருந்து மேற்கோள்களை எடுத்து வைத்து மேற்கண்ட முன்னறிவிப்பு நிறைவேறியதை தெரிவிக்கும் வகையில் ஈமானுக்கு எழுச்சியூட்டும் விதத்திலுள்ள சம்பவத்தையும் அன்னார் எடுத்துக் கூறினார்கள்.

**27 டிசம்பர் 2016 (செவ்வாய்க்கிழமை)**

இந்த அமர்விற்கு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா வக்∴பே ஜதீதின் தலைவரான ஸய்யது தன்வீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்த அமர்வு திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் ஆசிரியரான மதிப்பிற்குரிய முஹம்மது நூருத்தீன் சாஹிப் அவர்கள் சூரா அந்நூரின் 52 முதல் 56 வரையுள்ள வசனங்களை ஓதி அதற்கான மொழியாக்கத்தையும் கூறினார்கள். இதற்குப் பிறகு தில்லி ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய ஷேக் ∴பாத்திஹுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையை அழகிய குரலில் பாடினார்கள்.

இந்த அமர்வில் முதலாவதாக ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் முதல்வரான மதிப்பிற்குரிய முஹம்மது கரீமுத்தீன் ஷாஹிது சாஹிப் அவர்கள், 'முஸ்லிம்களின் ஒற்றுமையும் உலக அமைதி நிறுவப்படுவதும் நபித்துவ வழியிலுள்ள கிலா∴பத்துடன் தொடர்புடையதாகும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது உரையில் வ∴தஸிமூ பிஹப்லில்லாஹி ஜமீஅன் வலா த∴பர்ரகூ - அதாவது நீங்கள் எல்லாரும் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள். நீங்கள் பிரிந்து போய் விடாதீர்கள் என்ற வசனத்தின் ஒளியில் முஸ்லிம்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான ஒரே வழி அஹ்மதிய்யா கிலா∴பத் ஆகும். ஆரம்ப காலக்கட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு கிலா∴பத் மூலமாக முஸ்லிம்களிடையே ஒற்றுமை நிலைபெற்றிருந்தது. 30 வருடங்களுக்குப் பிறகு கிலா∴பத்தை கை விட்டு விட்டு முகந்திருப்பிச் சென்று விட்டதன் காரணமாக முஸ்லிம்கள் இடையே பிரிவினையும் பிளவும் ஏற்பட்டது என்று அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள். பிறகு அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நபித்துவ வழியிலுள்ள கிலா∴பத்தை நிலைநாட்டினான். அல் வஸிய்யத் என்னும் நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டிருந்த விஷயங்களை எடுத்துக் கூறியவாறு அன்னார் அஹ்மதிய்யா கிலா∴பத் நிரந்தரமாக இருக்கும் என்று அவர்கள் செய்த முன்னறிவிப்பையும் குறிப்பிட்டார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில் முஸ்லிம்களின் அவல நிலையைக் குறிப்பிட்டவாறு இதற்கான ஒரே காரணம் அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட கிலா∴பத்தை விட்டு அவர்கள் விலகிச் சென்றதாகும் என்று குறிப்பிட்டார்கள்.

இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை தலைமையக நாஸிர் த∴வத்தே இலல்லாஹ்வான மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்கள் நிகழ்த்தினார்கள். அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தல் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகள் என்ற தலைப்பில் அன்னார் தமது உரையின் ஆரம்பத்தில் يَآيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَآ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ மற்றும் اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِىْ هِىَ اَحْسَنُ ஆகிய வசனங்களின் ஒளியில் தமது கருத்துக்களை விளக்கிக் கூறினார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தூதுச் செய்தியை எட்ட வைக்குமாறு கட்டளையிட்டான். அதனை பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களது சஹாபாக்களும் அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு முழுமையாக நிறைவேற்றினர். மேலும், அரபு நாடு முழுவதும் இஸ்லாத்தை பரப்பினர் என்று அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் தமது தோழர்களிடம் நான் தப்லீக் செய்வதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டேனா? என்று கேட்டார்கள். எல்லா சஹாபாக்களும் ஒருமித்த குரலில் ஆம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தப்லீக் செய்வதற்கான உரிமையைச் செலுத்தி விட்டீர்கள் என்று கூறினர். பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு அவர்களுக்காக தமது உயிரை அர்ப்பணிக்கத் தயாராக இருந்த சஹாபா பெருமக்கள் இந்தக் கட்டளையை முழுமையாக நிறைவேற்றினார்கள். மேலும், முழு உலகிலும் அவர்கள் இஸ்லாத்தை பரப்பினர். பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கோணலான காலக்கட்டம் வந்தபோது முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. மேலும், இஸ்லாம் முஸ்லிம் அல்லாதவர்களின் ஆட்சேபனைகளுக்கு இலக்காகி விட்டது. இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறித்தவர்களாகி விட்டனர். அப்போது அல்லாஹ்வின் கருணை வழிகாட்டியது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் 1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி அஹ்மதிய்யா ஜமாஅத்தை நிறுவியதன் மூலம் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதற்கான அடித்தளத்தையும் அமைத்தார்கள். இன்று அவர்களது ஜமாஅத், அதாவது உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகவும் அதன் ஆன்மீகத் தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மூலமாகவும் முழு உலகிலும் சிறந்த முறையில் தப்லீக் பணி நடைபெற்று வருகின்றது. உலகில் உள்ள ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு நாட்டிலுள்ள மக்களும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்தியவாறு தங்களது ஆன்மீக எஞ்சியிருத்தலுக்கான வழிவகைகளை செய்து கொண்டிருக்கின்றனர். அல்ஹம்துலில்லாஹி அலா தாலிக் என்று அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள்.

இந்த அமர்வில் மூன்றாவதாகவும் இறுதியாகவும் 'கிலா∴பத் அமைப்பிற்கு கட்டுப்படுவதும் அதன் அருள்களும்' என்ற தலைப்பில் தென் இந்தியாவின் கூடுதல் நாஸிர் அ∴லாவான மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் தமது


**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். **Ph : +91 98437 22215**

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 2 February 2017 Issue No. 5

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

சொற்பொழிவில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:.பத்துல் மஸீஹ் அய்யதஹு'ல்லாஹு'த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் கிலா:.பத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தினார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்: கேளுங்கள். அதற்கு கட்டுப்பட்டு நடங்கள் என்பதே நமது பணியாகும். அல்லாஹ், அவனது தூதர் மற்றும் ஆட்சியில் இருப்பவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதே நமது வழிமுறையாக இருக்க வேண்டும். கட்டுப்படுகின்ற தன்மை இல்லாத சமுதாயம் முன்னேற முடியாது. கட்டுப்படுதல் என்பதன் பொருள் இதுவாகும். அதாவது, காலத்தின் கலீ:.பாவின் நாவிலிருந்து ஏதாவது ஒரு கட்டளை கூறப்பட்டால் எல்லா திட்டங்களையும் விருப்பங்களையும் ஒருபுறம் வைத்து விட்டு காலத்தின் கலீ:.பாவின் கட்டளையை ஏற்று செயல்பட வேண்டும். தமது வழிமுறைகளை தூக்கி வைத்து விட்டு காலத்தின் கலீ:.பா கூறும் வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். காலத்தின் கலீ:.பாவின் கட்டளைக்கேற்ப செயல்படுவதன் மூலமாக ஆன்மீகத்தில் முன்னேற்றமும் ஏற்படுகின்றது. இறை வணக்கத்தில் எழுச்சி ஏற்படுகிறது. மனிதர்களுக்கு தொண்டு செய்யும் உணர்வு வளர்கின்றது. இறைவனின் திருப்தியும் அவனது பொருத்தமும் நமக்கு கிடைக்கின்றது.

அவர்களது சொற்பொழிவிற்குப் பிறகு மாநாட்டுத் தலைவரின் அனுமதியுடன் இந்த அமர்வு நிறைவை அடைந்தது.

*(தொடரும்....)*

---

*(6-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

கலந்து கொள்வதில் அதிகமான மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். என்னை நானே ஜமாஅத்துடன் தொடர்புடையவனாகக் கருதுகின்றேன். இங்கு பள்ளிவாயில் கட்டுவதற்கு எதிர்ப்பு இல்லை என்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் ஹு'ஸு'ர் அவர்களைப் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். அவர்கள் மிகவும் சிறந்த விஷயங்களைக் கூறியுள்ளார்கள். இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு இதைப் பார்க்க வருவதற்கு நான் முயற்சி செய்வேன். பெண்கள் மிகவும் சுதந்திரமாக இருக்கின்றனர் என்று இஸ்லாத்தில் பெண்களுக்குள்ள அந்தஸ்து பற்றி ஹு'ஸு'ர் அவர்கள் கூறிய விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

- Harik Burkhauser என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: இந்த நிகழ்ச்சியின் மூலம் நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றேன். முதன் முறையாக எனக்கு முஸ்லிம்களுடன் தொடர்பு உருவாகி இருக்கின்றது. நான் நல்ல முஸ்லிம்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றேன். இன்று அவர்களைப் பற்றிய அனுபவமும் எனக்க ஏற்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். முழு நிகழ்ச்சிகள் தொடர்பான ஏற்பாடுகள் மிகவும் நன்றாக இருந்தது.
- Due Grunen என்ற அரசியல் கட்சியைச் சார்ந்த ஒரு நகரத்தின் பாராளுமன்ற உறுப்பினரான Kurt Laver என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாட்டுப் பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்ற தூதுச் செய்தியைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். குறிப்பாக துருக்கியிலுள்ள மக்களைப் பார்த்து அவர்கள் அந்த நாட்டிற்கு உண்மையான முறையில் நன்றியுள்ளவர்களாக இல்லை என்பதை அறிந்து அவர்கள் மிகவும் கவலை அடைவதாக அவர்கள் கூறினார்கள். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் ஹு'ஸு'ர் அவர்களின் சொற்பொழிவை கேட்டு நாட்டிற்கு நன்றியுள்ளவர்களாகத் திகழ்வது தெரிய வருகின்றது. குறிப்பாக ஜெர்மனி மொழி நன்றாக தெரிந்த ஜமாஅத்தின் ஒரு முரப்பியுடன் பேசியதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால், ஏனைய முஸ்லிம்களது இமாம்கள் ஜெர்மன் மொழி பேசுவதே இல்லை. அரசியலையும், மதத்தையும் தனித்தனியாக வைக்க வேண்டும் என்ற உங்களது கொள்கை மிகவும் சிறப்பானதாகும் என்று மேலும் அவர்கள் கூறினார்கள்.
- Jurgen Luders என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: எங்களது நகரம் பள்ளிவாயில் கட்டுவதற்கான இடத்தை வழங்குவதில் இந்த அளவு காலதாமதம் ஆக்கியிருப்பது அறிந்து நான் மிகவும் வருந்துகின்றேன். உங்களுக்கு வெகு காலம் முன்பே இடத்தை தந்திருக்க வேண்டும்.

# ஒரு நாள் தர்பிய்யத் பயிற்சி முகாம்

கோட்டார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பில் 25.12.2016 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஒரு நாள் நல்லொழுக்கப் பயிற்சி முகாம் ஜமாஅத் அரங்கில் நடைபெற்றது.

திருநெல்வேலி மேலப்பாளையம் ஜமாஅத்தின் துணை அமீர் ஜனாப். M.J. அக்பல் அலி சாஹிப் தலைமை தாங்கினார்கள். ஹாஃபிஸ் ஹலீக் அஹ்மது திலாவத் ஓதினார்கள். ஜமாஅத்தின் தலைவர் முஹம்மது முஹியுத்தீன் சாஹிப் கிலாஃபத் உறுதிமொழியை வாசித்தார்கள். தொடர்ந்து கூட்டத் தலைவர் தமது தலைமை உரையில் மூன்றாம் உலகப் போர் குறித்து ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் எச்சரிக்கை-களையும், உலக மக்கள் அதிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

அடுத்து இறையச்சம் என்ற தலைப்பில் உரையாற்றிய கோட்டார் ஜமாஅத்தின் தலைவர் ஜனாப் முஹம்மது முஹியுத்தீன் சாஹிப் அவர்கள் எல்லா நன்மைகளின் ஆணி வேர் இறையச்சம் என்றும், இறையச்சம் இல்லை என்றால் திருக்குர்ஆனின் நுட்பமான ஞானங்களை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது என்றும் திருக்குர்ஆன் சான்றுகளுடன் விரிவாக விளக்கிக் கூறினார்கள்.

அடுத்து உரையாற்றிய இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலர் ஜனாப் M. மன்சூர் அஹ்மது சாஹிப் தொழுகையின் சிறப்பு என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் தொழுகையை நிலைநாட்டுவதால் ஏற்படும் பயன்களைக் குறித்தும் ஜமாஅத்தாக தொழுவதன் அவசியம் குறித்தும் திருக்குர்ஆன் ஹதீஸ்களின் ஒளியில் விரிவாக உரையாற்றி-னார்கள்.

ளுஹர், அஸ்ர் தொழுகை மற்றும் மதிய உணவு இடைவேளிக்குப் பிறகு இரண்டாம் அமர்வு ஆரம்பமானது. ஜனாப் M. மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்கள் திலாவத் ஓதினார். தொடர்ந்து கோட்டார் ஜமாஅத்தின் பொறுப்புப் பிரச்சாரகர் மவ்லவி ஷஃபீக் அஹ்மது சாஹிப் அவர்கள் ‘இறை வழியில் பொருள் தியாகம்’ என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தமது உரையில் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வதால் அஹ்மதி முஸ்லிம்கள் பெற்று வரும் இறை அருள்கள் குறித்தும், பொருள் தியாகத்தில் கருமித்தனம் காட்டுவதால் ஏற்படும் நஷ்டங்களைக் குறித்தும் திருக்குர்ஆன் ஹதீஸ் மற்றும் கலீஃபாக்களின் ஒளியில் சான்றுகள் கூறி உரையாற்றினார்.

அடுத்து கிலாஃபத்தின் அருள்கள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள், ஓர் இமாமின் கீழ் ஓரணியில் இயங்கும் சமுதாயம் உலகில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும்தான் என்று குறிப்பிட்டார்கள். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கிலாஃபத்தின் அருள்கள் மூலமாகவும் நாம் இறை பண்புகளை - இறை கட்டளைகளை சரியாக தெரிந்து செயலாற்ற முடியும் என்று குறிப்பிட்டார்கள்.

கோட்டார் ஜமாஅத்தின் தலைவர் அவர்களின் நன்றி உரைக்குப் பிறகு கூட்டத் தலைவர் அவர்களின் துஆவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த முகாம் குறித்த செய்திகள் நாகர்கோவில் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் : M. மன்சூர் அஹ்மது - இர்ஷார்-வ-இர்ஷாது செயலர்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad